## கவனம் ஈர்த்த அரசுப் பள்ளி மாணவி!



அரசுப் பள்ளி மாணவர்களின் கலைத் திறமைகளை ஊக்குவிக்க, தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை சார்பில், ஆண்டு தோறும் கலைத் திருவிழாப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்றாண்டுகளில் கலைத் திருவிழா மேடைகளில் பங்கேற்று, திறமைகளை மெருக்கேற்றிக் கொண்டதற்கு அடையாளமாகச் சமீபத்தில் கவனம் ஈர்த்துள்ளார், கரூர் மாவட்டம், மணவாடி அரசு மேல்நிலைப்பள்ளியின் ஒன்பதாம் வகுப்பு மாணவி யோகஸ்ரீ.

டைல்ஸ் ஒட்டும் கூலித் தொழிலாளியின் மகளான யோகஸ்ரீ, சிறுவயதிலிருந்தே பாடும் திறமை கொண்டவராக இருந்துள்ளார். அதைக் கண்டறிந்த அம்மாணவியின் இரண்டாம் வகுப்பு ஆசிரியை மகேஸ்வரி, யோகஸ்ரீயை ஊக்கப்படுத்தியதுடன், பல்வேறு போட்டிகளிலும் கலந்துகொள்ள உற்சாகப்படுத்தியுள்ளார்.

கரூர் மாவட்ட அளவிலான கலைப் போட்டிகளில் பங்கேற்று வந்திருந்த ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஆச்சரியப்படுத்தி இருக்கிறார் யோகஸ்ரீ.

இந்த நிலையில், மாணவியை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்ல நினைத்த ஆசிரியை, அவரைத் தனியார் தொலைக்காட்சியில் நடைபெற்ற 'சரிகமப லிட்டில் சாம்பியன்ஸ்'ல் மேடை ஏற்றி இருக்கிறார். அப்போது அவர் பாடிய பாடல் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்துள்ளது. நடுவர்களாக இருந்த பிரபல பாடகர்களும் ஆச்சர்யம் அடைந்துள்ளனர்.

அவர் பாடியது மட்டுமல்ல, அவ்வளவு பெரிய மேடையை, மாணவி இலகுவாக முதிர்ச்சியாகக் கையாண்டார் என்றும் மாணவியைச் சமூக வலைதளங்களில் பலரும் பாராட்டி வருகின்றனர்.

அரசுப் பள்ளி மாணவர்களின் திறமை மேடை ஏற வேண்டும் என்கிற இலக்கில், கலைத் திருவிழாக் கொண்டாட்டங்கள் அதன் பலனை எட்டி வருகின்றன.

## ஃப்ளாஷ்பேக்





நா.அறிவுமணி

### எனக்கும் பெயர் சூட்டி, என் மகளுக்கும் பெயர் சூட்டிய தலைவர்!

2015-ஆம் ஆண்டு எங்களுடைய திருமண நாளையொட்டியும் என்னுடைய மகளுக்குப் பெயர் சூட்ட வேண்டியும் என் தந்தை நாத்திகம் நாகராஜன் அவர்களுடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்தோம். எனக்கும் தலைவர் கலைஞர் அவர்கள்தான் பெயர் வைத்தார். தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்ததும் என்னுடைய பெயரையும் என் துணைவியாருடைய பெயரையும் கேட்டார், அறிவுமணி-மாலதி என்றோம். உடனே என் மகளுக்கு, மணிமேகலை என்று பெயர் சூட்டி வாழ்த்தினார். என்னுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்விது.

**– நா.அறிவுமணி, வட்டப் பொருளாளர்**
**காஞ்சிபுரம் மாநகரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பார்ப்பனர் அல்லாத மக்களின் தலைவர்!

1925-ஆம் ஆண்டு, காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறினார், தந்தை பெரியார். பார்ப்பனர் அல்லாதவர்களின் உரிமைக் குரலுக்கு, அக்கட்சியில் ஆதரவு இல்லாத காரணத்தால் வெளியேறி, சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள், சமூகநீதி மற்றும் சுயமரியாதையைத் தொடர்ந்து வலியுறுத்திய தந்தை பெரியார், மதராஸ் மாகாணத்தில் பார்ப்பனரல்லாத மக்களின் முக்கியத் தலைவராக உருவெடுத்தார்.


## சீரணி → இளைஞர் அணி

35

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...**

ஓவியம் : ரவி பேலட்



# ஜனநாயகமும் சீரணியும்!

பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வழிநடத்தப்பட்ட சீரணி இயக்கம், 1967-ஆம் ஆண்டு முதல் 1974-ஆம் ஆண்டு வரை, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு சமூக மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு சாதனைகள் பலவற்றைப் படைத்தது.

அந்த இயக்கத்தின் கடைசிச் செயல்பாடாக நமக்குத் தெரிய வருவது, சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் தெப்பக்குளம் தூர் வாரப்பட்ட பணி. 1975- ஆம் ஆண்டு அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது. அப்போது, தமிழ்நாடு பயங்கரமான வறட்சியைச் சந்தித்து வந்தது. அதைக் குறித்து, 1975- ஆம் ஆண்டு ஏப்ரல் 28 அன்று, வடபழனி கோயில் பகுதியில் தூர் வாரும் பணியைத் தொடங்கி வைத்த போது, முதல்வர் கலைஞர் அவர்கள் இவ்வாறு பேசினார்:

"அண்மையில் கபாலீஸ்வரர் ஆலயக் குளத்தில் தூர் எடுக்கும் பணி தொடங்கப்பட்டது. அந்தக் குளத்தில், இப்போது ஆறேழு கிணறுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அவை செப்பனிடப்படும் பணியும் சீரணியினரால் நடந்து கொண்டிருக்கிறது. இது எதைக் காட்டுகிறதென்றால், வறட்சி என்பது ஏதோ கருணாநிதியின் ஆட்சியில் மாத்திரம் வந்துவிட்ட ஒன்றல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பே இதுபோன்ற வறட்சி ஏற்பட்டு, ஆழமான குளத்திற்கு அடியிலேயும் இன்னும் ஆழமாகக் கிணறுகளைத் தோண்டி தண்ணீர் எடுக்கிற அளவிற்கு வறட்சி இருந்திருக்கிறது. அதற்கு அடையாளம்தான் இந்தக் கிணறுகள்."

அந்த நிகழ்ச்சி, நடந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஜூன் மாதம் நாடு முழுவதும் அவசர நிலை, பிரகடனம் செய்யப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் உட்படப் பல கட்சிகள் இந்திரா காந்தி தலைமையிலான சர்வாதிகார ஆட்சியில், பல்வேறு இன்னல்களுக்கு ஆளாயின. அந்த நெருக்கடி நிலையை எதிர்த்து, இதரக் கட்சிகள் எல்லாம் மௌனமாக இருந்தபோது, அதை எதிர்த்து வலுவுடன் குரல் கொடுத்த ஒரே கட்சி... நமது கழகம் மட்டும்தான்..!

ஜூன் மாதம்தான் அதிகாரப்பூர்வமாக அவசர நிலை செயல்படுத்தப்பட்டது என்றாலும்கூட, அதற்கான முஸ்தீபுகள் ஜனவரி மாதம் முதற்கொண்டே தொடங்கிவிட்டன. அப்போதிருந்தே கலைஞர் அவர்கள் அவசர நிலைக்கு எதிராகப் பேசியும் எழுதியும் வந்தார்.

அவசர நிலை செயல்படுத்தப்பட்ட சில மாதங்களுக்குள் அன்றைய தமிழ்நாடு ஆளுநர் கே.கே.ஷா அவர்களால் "சீரணி கலைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக, 1976- ஆம் ஆண்டு மார்ச் 31 அன்று வெளியான செய்தி ஒன்றில், "சீரணியில் அரசியல் சார்புடையவர்களே சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதால், இந்த முடிவு எடுக்கப்பட்டது" என்று அதற்கு அவர் காரணம் கூறினார்.

**நெருக்கடி நிலையை எதிர்த்து, இதரக் கட்சிகள் எல்லாம் மௌனமாக இருந்தபோது, அதை எதிர்த்து வலுவுடன் குரல் கொடுத்த ஒரே கட்சி... நமது கழகம் மட்டும்தான்..!**

தொடர்ந்து, 1977 ஏப்ரல் 6 அன்று மாநிலங்களவையில் ஜீ. லட்சுமணன் எனும் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர், "மொத்தத் தமிழ்நாட்டிலும் இருபத்து ஐயாயிரம் பேர் இதில் ஈடுபட்டிருந்தார்கள். இதற்கான செலவும் சொற்பமே! சீரணியினர் பணிக்கு வரும்போது கொஞ்சம் சிற்றுண்டி தரப்பட்டும். 6 அல்லது 7 மணி நேர உழைப்புக்கு ரூ.25 அல்லது ரூ.30 தான் தரப்பட்டு வந்தது. தமிழ்நாட்டில் படித்த பட்டதாரி இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதற்காக, இந்த அணி பயன்படுத்தப்பட்டது. அப்படிப்பட்ட சீரணியைக் கலைக்க எடுத்த நடவடிக்கையை, தி.மு.க. சார்பில் கண்டிக்கிறேன்" என்று பேசினார்.

இப்படியாக ஜனநாயகம் சீரழிக்கப்பட்ட அவசர நிலைக் காலத்தில், சீரணியும் முடக்கப்பட்டது. சர்வாதிகாரம் தலையெடுத்த அடுத்த சில ஆண்டுகளுக்குள் 1980-இல், மக்களாட்சி தழைக்க உதித்தது தளபதி அவர்களின் தலைமையிலான இளைஞர் அணி. ஆனால் அதற்கு முன்பே 1971-லேயே **'இளைஞர் அணி'** என்ற பெயரிலேயே, கலைஞர் அவர்கள் அரசுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தினார். ஆம்... விதை அவர் போட்டது..!

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி

35

**கோவி.லெனின்**

**"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."**

# கலைஞர் கொடுத்த நிர்பந்தம்!

**"இலங்கை அரசால் ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது, தமிழ்த் தேசியம் துடித்தது. திராவிடம் இரண்டு குளிரூட்டிகளுடன் உண்ணாவிரதம் நடத்திக் கொண்டிருந்தது" என்று சீமான் விமர்சித் திருக்கிறாரே?**

இலங்கையில் போர்நிறுத்த அறிவிப்பை வலியுறுத்தி, உண்ணாவிரதம் இருப்பதற்காக 2009-ஆம் ஆண்டு ஏப்ரல் 27-ஆம் நாள் சென்னை, கடற்கரை அண்ணா சதுக்கத்தில் 85 வயதான முதலமைச்சர் கலைஞர் வந்தபோது காலை 6.30 மணி. எந்த முன்னறிவிப்பும் இல்லாத கலைஞரின் இந்தத் திடீர் உண்ணாவிரதம் டெல்லி வரை அதிர வைத்தது. இந்திய வெளியுறவுத் துறை இலங்கை அரசிடம் பேசியது. இதையடுத்து, காலை 10 மணிக்கு, இலங்கை அரசு மற்றும் இலங்கை ராணுவத்தின் உயர் அதிகாரிகள் கூட்டம் நடைபெற்றது.

**ஒரு மாநிலத்தின் முதல் அமைச்சராகத் தன்னால் ஆன நிர்பந்தத்தைக் கொடுத்து, இன்னொரு நாட்டின் இனப் பிரச்சினையில் உடனடியாக ஓர் அமைதிநிலை ஏற்பட உறுதியுடன் செயலாற்றியவர் திராவிட முதல்வர் கலைஞர்.**

இலங்கையின் வடக்குப் பகுதியில் (ஈழம்) விமானத்தில் இருந்து குண்டுகள் வீசுவதை நிறுத்துவதுடன், கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதையும் நிறுத்திவிட்டு, பொதுமக்கள் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும்



என முடிவெடுக்கப்பட்டது. இலங்கை ராணுவத்தின் இணையதளமான www.defence.lk இதனைப் பதிவேற்றியது. புகழ்பெற்ற பத்திரிகையான 'THE GUARDIAN' இணையதளமும் இதை வெளியிட்டது.

இலங்கை அரசு தனது முடிவை இந்திய அரசுக்கு நன்பகலில் தெரிவிக்க, இந்திய ஒன்றிய அரசு அந்த அறிவிப்பை வெளியிட, அப்பாவி ஈழத்தமிழ் மக்களை ராணுவத்தின் தாக்குதலில் இருந்து காக்க வேண்டும் என்ற தனது கோரிக்கையை நிறைவேற்ற, சம்மதித்ததை அறிந்த கலைஞர் 12.30 மணி அளவில் உண்ணாவிரதத்தை நிறைவுசெய்தார்.

85 வயது முதல்வர் பொது இடத்தில் எல்லாரும் பார்க்கின்ற வகையில் 6 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்தார். தன் கோரிக்கையை இலங்கை அரசு ஏற்கும் சூழலையும் அரசியல் நெருக்கடி வாயிலாகக் கட்டமைத்தார். போராட்டத்தின் நோக்கம் நிறைவேறியதும் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.


ஒரு மாநிலத்தின் முதல் அமைச்சராகத் தன்னால் ஆன நிர்பந்தத்தைக் கொடுத்து, இன்னொரு நாட்டின் இனப் பிரச்சினையில் உடனடியாக ஓர் அமைதிநிலை ஏற்பட உறுதியுடன் செயலாற்றியவர் திராவிட முதல்வர் கலைஞர். அதை நிரந்தர அமைதியாக ஆக விடாமல் செய்து, ஈழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை முள்ளிவாய்க்கால் எனும் முட்டுச்சந்தில் கொண்டு போய் நிறுத்தியது தமிழ்த் தேசியம். இந்த உண்மையை மறைக்கத்தான், குளிரூட்டிகள் பற்றியும் அதற்கு மேலேயும் சீமான் பேசுகிறார். அதற்கான பதில்களை விஜயலட்சுமிகள் செமத்தியாகக் கொடுப்பார்கள்.

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

653

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131